வரதர்

# யாழ்ப்பாணத்தார் கண்ணீர்!

பதினான்கு ஆண்டுகாலக்

கண்ணீர்க் கடலின்

ஒரு சிறு துளி

# யாழ்ப்பாணத்தார் கண்ணீர்!

பதினான்கு ஆண்டு காலக்
கண்ணீர்க் கடலிலிருந்து
ஒரு சிறு துளி

- வரதர் -

நூல்; ''யாழ்ப்பாணத்தார் கண்ணீர்''

ஆசிரியர்: வரதர்

முன்னுரை: 'செங்கை ஆழியான்'

வெளியீடு: வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்

முதற் பதிப்பு: யூன் '97

அச்சுப் பதிவு: ஆனந்தா அச்சகம்,
226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்.

விலை: ரூபா 20/-

வீரகேசரி வார இதழில் (26 - 5 - 96)
முதன்முதலில் வெளிவந்தது

# முன்னுரை

**1995** ஒக்டோபர், 30ஆம் திகதி யாழ்ப் பாணக் குடாநாட்டின் மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுகளையும், தேடிய தேட்டங்களையும் கைவிட்டு, ஓடில்லாத ஆமைகளாகவும், கூடில்லாத நத்தைகளாகவும் பயத்தோடும் பரிதவிப்போடும் ஊர் களைவிட்டு ஏதிலிகளாக ஓடிய மனுக் குலசோக நாட கத்தை மீண்டும் நினைத்துப் பார்க்கும்போது, அதில் பங்கேற்ற நான்கு இலட்சம் மக்களின் நெஞ்சங்கள் நடுங்காதிருக்காது!

அந்தச் சோக நாடகத்தின் சமூகப்பயன் ஈழத்து வரலாற்றில் ஒரு கறை. கட்டியெழுப்பிய சுதந்திர மாளிகையின் தாங்குநிலையை ஐயுற வைத்துள்ள பூகம்ப அலை!

ஆயிற்று.

அந்தச் சோக நாடகம் ஆரம்ப கட்டத்திற்கே திருப்பவும் மீண்டு விட்டது.

இந்த நாடகத்தில் நடித்த இலட்சோப இலட்சம் மக்களில் பலர் காணாமல் போய்விட்டார்கள்! இயக்குநர் இல்லாத மேடையில் மேய்ப்பவரின்றி நிற்கின்றோம்.

இழந்துவிட்ட சொர்க்கத்திற்கு மீண்டுவந்த உணர்வு செத்துப் பலகாலமாகின்றது. எல்லாமிருந்தும் எதுவுமேயில்லாத உணர்வு!

இந்த நாடகத்தின் ஒவ்வொரு அசைவிலும் மனுக்குலம் அகௌரவப்படுகின்றது. இடிபடுகின்றது.

மனுக்குலத்தின் இதயம் குத்தப்பட்டு குருதி வடிகின்றது. ஓடியபொழுது இருந்த பயமும், பரிதவிப்பும் திரும்பி வந்தபோது பயமும் அவமானமுமாக மாறிவிட்டன.

வீடுகளுக்குள் முடங்கிச் சிறைப்படுத்திக்கொள்வதன் மூலம் வீதிகளில் சந்திக்கின்ற அவமதிப்புக்களையும் மனக்காயங்களையும் குறைத்துக்கொள்ளும் தந்திரோபாயத்திற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் வந்துவிட்டனர்.

இந்த இடம்பெயர்வுச் சோகநாடகத்தின் முதற் காட்சியை அந்த நாடகத்தின் பாத்திரங்களில் ஒன்றாகி, மானிட வேதனைகளை முற்றாக அனுபவித்ததின் விளைவாக, கவிதா ஆவேசமாக இந்நூல் வெளிவருகின்றது. இதனை நாடறிந்த மூத்த எழுத்தாளர் 'வரதர்' ஆக்கித் தந்துள்ளார் அவரைப்பற்றியும் அவரது பன்முகத் தோற்றங்கள் பற்றியும் அவரது இலக்கியப்பணி பற்றியும் பெருநூல் ஒன்றினை ஆக்குவதற்குரிய தகவல்கள் இருக்கின்றன.

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்து இலக்கிய வரலாறு எழுதமுடியாது. ஏனெனில் ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய படிக்கல்லாக விளங்கிய ''மறுமலர்ச்சி'' இயக்கத்தின் பிதாமகர்களில் அவரும்ஒருவர். மறுமலர்ச்சி என்ற பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவராக விளங்கி, தமிழகத்தில் 'மணிக்கொடி' போல ஈழத்தில் மறுமலர்ச்சிப் பரம்பரையொன்றினை உருவாக்கக் காரணமானவர்களில் வரதர் முக்கியமானவர். மறுமலர்ச்சிச் சஞ்சிகைமூலம் ஈழத்தின் காத்திரமான படைப்பாளிகள் உருவாகினர். பிற்கால கட்டத்தில் அவர் வெளியிட்ட ''ஆனந்தன்'', ''புதினம்'', ''வெள்ளி'', ''அறிவுக்களஞ்சியம்'' ஆகிய சஞ்சிகைகளும் ஈழத்து இலக்கியத்துக்குப் பெருமைசேர்க்கும் பல படைப்புகளையும் படைப்பாளிகளையும் தந்துள்ளன.

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்துச் சிறுகதை வரலாற்றை எழுதிவிட முடியாது.

அவரது சிறுகதைத் தொகுப்பான "கயமை மயக்கம்" (வரதர்கதைகள்), ஈழத்தமிழ் மக்களின் ஒரு காலகட்டத்துச் சமூக ஆவணமாகும். அவரது கதை சொல்லும் பாங்கும் சமூக நோக்கும் அவரது சிறுகதைகளை தனித்துவப்படுத்தியுள்ளன. இலக்கியத் தேடலுடன் கூடிய கலாபூர்வச் சித்திரிப்பு அவரது சிறுகதைகளில் பரவி நிற்கும்.

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்து நூல்களின் வரலாற்றை எழுதிவிடவும் முடியாது.

'வரதர் வெளியீடு' என்ற நிறுவனத்தின் மூலம் நூற்றிற்கு மேற்பட்ட கல்விசார் நூல்களையும் இலக்கிய நூல்களையும் அவர் வெளிக்கொணர்ந்துள்ளார்.

என்னுடைய நூல்கள் பல வெளிவருவதற்கு அவர் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். ஈழத்து போராட்ட வரலாற்றினை ஆவணப்படுத்தும் நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். மட்டக்களப்பில் வீசிய சூறாவளி அனர்த்தங்களைக் கூட 'பன்னிரண்டுமணி நேரம்' என என்னைக்கொண்டு எழுதுவித்து வெளியிட்டுள்ளார். இதில் என்ன முக்கியம் என்றால் கிழக்கிலங்கையில் சூறாவளி வீசப்போகிற செய்தி வானொலியில் அறிவிக்கப்பட்டதும் என்னையும், செம்பியன் செல்வ

ணையும் அழைத்து மட்டக்களப்புக்கு நேரில் சென்று அச் சூறாவளியைச் சந்தித்து எழுதும்படி கோரி அனுப்பியமைதான், நான் நினைக்கின்றேன். அப்படி யொரு ஒரு நூல் தமிழில் வேறொன்று வெளிவந்திருக்கு மென்பது சந்தேகமாகும்.

வரதரின் இன்னொரு பண்பு ஏதாவது ஒரு நூலைப் படித்துமுடித்ததும் அந்த நூல் அவருக்குத் திருப்தி யைத் தந்தால் அந்த நூலின் ஆசிரியருக்குச் சுருக்கமா கத் தன் உணர்வை வெளிப்படுத்துகின்ற இனிய செயற் பாடாகும்.

வரதரை ஒதுக்கிவிட்டு ஈழத்து நவீன கவிதை வர லாறு எழுதிவிட முடியாது.

வரதர் சிறுகதை ஆக்க இலக்கிய கர்த்தாவாகத் தன்னை இனங்காட்டிக்கொண்டுள்ளபோதிலும் அவ ரது உள்ளத்தில் கவிதைகள் எவ்வளவிற்கு இடங் கொண்டிருந்தன வென்பதற்கு அவர் இலக்கியச் செயற் பாடுகள் ஆதாரங்களாகவுள்ளன. ஈழத்துக் கவிதை வளர்ச்சிச்சென ''தேன்மொழி'' என்றொரு கவிதைச் சஞ்சிகையை அவர் நடாத்தியுள்ளார். ஈழத்தில் இன்று சிறந்து விளங்குகின்ற பலகவிஞர்களைத் 'தேன்மொழி' இனங்காட்டியிருக்கிறது. கவிதை மீதுள்ள அவரது ஈடு பாடு மகாகவியின் கவிதைகளை முதன் முதலாக ''வள்ளி'' என்ற நூலாக வெளியிடத் தூண்டியுள் ளது.

இன்று தமிழிலக்கியத்தில் புதுக்கவிதைப் பேசப்படு வதற்கு வெகு காலத்திற்கு முன்னரேயே ஈழத்தில் முதன் முதல் அவ்வாறான புதுக்கவிதைகள் சிலவற்றினை வரதர் ஆக்கியுள்ளார் என்பது ஆரோக்கியமான சங்கதி.

இந்தக்கவிதை நூல் சத்திய ஆவேசம் கொண்ட ஒரு கவிஞனின் ஆழ் மனதில் உறங்கிக்கிடந்த மானிட நேயத்தைத் தூண்டியிருக்கிறதென்பதற்குச் சான்றாகிறது. இந்த மானிட அவலம் புதுக்கவிதைகளாக வெளிவராவிடில் வரதர் என்ற கவிஞனால் நிச்சயமாக உறங்கியிருக்க முடியாது. காலம் வந்ததும் வயிற்றில் தாங்கிய கரு வெளிவராத பெரும் மனஅழுத்தம் வரதருக்கு இருந்திருக்கும். சாதாரண மனிதனுக்கு ஒரு இழப்பின் அல்லது தாங்கொணாத் துயரத்தின் வெளிப்பாடு புலம்பலும் கண்ணீருமென்றால், கவிஞனுக்கு இது இலக்கியப்படைப்பாகத் தானிருக்க முடியும். அதனை வரதர் செய்திருக்கிறார்.

வரதரின் 'யாழ்ப்பாணத்தார் கண்ணீர்' என்ற இந்தப் புதுக்கவிதை நூல், ஒரு காலகட்டத்து ஆவணம் என்ற நிலைப் பாட்டிற்கும் அப்பால் தக்கதொரு கவிதை நூலாகவும் கணிக்கப்பட்டதாக இருக்கின்றது. மானிட சோகத்தின் கவிதா புலம்பலாக இந்த நூல் விளங்குகிறது. ஒவ்வொரு வரியும் நாம் அனுபவித்த அவலத்தினையும், இழப்புக்களையும், ஏமாற்றங்களை

யும் எடுத்து விளம்புவதன் மூலம் நெஞ்சில் குருதி வடிய வைக்கின்றது. இந்தக் கவிதைகளில் சொன்ன விஷயங்களிலும் சொல்லாத விஷயங்கள் பல தொக்கி நிற்கின்றன. அவை கவிதைகளை உன்னிப்பாகப் படிக்கும் போது எஞ்சிநிற்கின்ற உணர்ச்சியினடியாகத் தெரிகின்றன. எனக்குப் புதுக்கவிதைகள் பிடிப்பதில்லை. அதற்காக அந்த இலக்கிய வடிவத்திற்கு நான் எதிரியல்லன். ஆனால் வரதரின் இந்தப் புதுக்கவிதைகள் ஏனோ எனக்குப்பிடிக்கின்றன. ஏனெனில் இதில் இருப்பவை சத்தியம், உண்மை.

காலத்திற்குத் தேவையான ஒரு இலக்கியப்பணியை வரதர் இந்த நூல் மூலம் ஆற்றியுள்ளார். அவரைப் பாராட்டவோ, வாழ்த்தவோ எனக்கு அருகதையில்லை. ஏனெனில், நான் இந்த மண்ணில் பிறந்த போது அவர் இலக்கிய கர்த்தாவாகக் கோலோச்சிக் கொண்டிருந்தவர்.

27 - 04 - 1997 — செங்கை ஆழியான்.

# நன்றி

O இந்தக் கவிதை தமது கைக்குக் கிடைத்த உடனேயே என்னைத் தொலைபேசியில் அழைத்துப் பாராட்டியதுடன், அடுத்த வார வீரகேசரி இதழிலேயே வெளியிட்ட எனது மதிப்புக்குரிய நண்பரும், வீரகேசரியின் அன்றைய பிரதம ஆசிரியருமான திரு. ஆ. சிவநேசச்செல்வன் அவர்களுக்கும்—

O இதனை ஒரு சிறு நூலாக வெளியிட்டு ஆவணப்படுத்த வேண்டுமென்ற சில நண்பர்களின் விருப்பப்படி இதை நூலாக்கத் துணிந்த போது, இந்தச் சிறிய நூலுக்கு ஒரு பெரிய, சிறந்த முன்னுரை எழுதி உதவிய எனது நல்ல நண்பர் திரு. 'செங்கை ஆழியான்' அவர்களுக்கும்—

O இதன் அச்சமைப்பு நேர்த்தியாக அமைவதற்கு விருப்போடு துணைபுரிந்த நண்பர், 'உதயன்' திரு. ஈ. சரவணபவன் அவர்களுக்கும் —

எனது மனம் கனிந்த நன்றிகள்.

— வரதர்

# யாழ்ப்பாணத்தார் கண்ணீர்!

ஐயோ என் தாயே,
அறிவார்ந்த யாழ்ப்பாண
அம்மா, இது கொடுமை!

தாயைப் பிரிந்து
தவிக்கின்ற பிள்ளைகள்போல்
நாடம்மா! உனைப்பிரிந்து
நலிகின்றோம். இதுகொடுமை!

முப்பது பத்து
தொண்ணூற்று ஐந்தன்று
முன்னிரவு வேளை
முதேசி வந்ததுபோல்
பயங்கரச் செய்தி ஒன்று:

‘பட்டாளம் வருகிறதாம்!
ஓடுங்கள் ஊரைவிட்டு!
உடனே புறப்படுங்கள்!
தாமதித்தால் ஆபத்து!
தப்பாது உங்கள் உயிர்’

என்றந்தச் செய்தி
எமனாக வந்ததம்மா!

அடுத்த கணமே
அயலட்டை எல்லாரும்
கையிலே தலையிலே
காவும் பொருட்களுடன்
ஒழுங்கைக்கு வந்தார்கள்

ஒழுங்கை நிறைந்துவிட
குய்யோ முறையோ
கூச்சல் குழப்பங்கள்!

ஒழுங்கையால் நடந்துபெருந்
தெருவுக்கு வந்தோமா—

ஐயையோ, என்ன இது?
ஊர் முழுக்க அங்கே
ஒரேயடியாய் நடக்கிறது!

ஆண்கள், பெண்கள்
ஆடி விழுந்துவிடும்
அப்புமார், ஆச்சிமார்,
கைபிடித்து நடக்கும்
கண்ணான சின்னவர்கள்,
இடுப்பிலும் தோளிலும்
இருக்கின்ற குஞ்சன்கள்,
படுக்கை தனை வேண்டும்
படுவருத்தக் காரர்கள்,
இடுப்பிலே இருக்கும்
இளசுக்கு அடுத்ததாய்

வயிற்றுக்குள் ளேயிருக்கும்
வருங்கால மொட்டுக்கள்
காலை இழந்து
கைத்தடியில் நடப்பவர்கள்
கண்ணை இழந்துபிறர்
கைபிடித்து நடப்பவர்கள்!

என்ன கொடுமை இது!
என்ன கொடுமை இது!

ஊர் முழுக்கக் கூடி
எங்கே நடக்கின்றார்?

கட்டிய வீடும்
கமம்புலமும் அத்தோடு
தின்னாமல் குடியாமல்
பரம்பரையாய்ப் பரம்பரையாய்
பதுக்கிவைத்த சொத்துகளும்

எல்லாமே விட்டுவிட்டு
எங்கிவர்கள் போகின்றார்?

'எங்கேயோ' போகின்றார்!

அன்பாய் அருமையாய்
ஆசையாய்த் தாம்வளர்த்த
ஆடுகள், மாடுகள்,
அழகான நாய்பூனை
எல்லாமே விட்டுவிட்டு
எங்கிவர்கள் போகின்றார்?

'எங்கேயோ' போகின்றார்!

இராப் பொழுது; மழைநேரம்
ஈ, காக்காய் போல் அலைய
இவர் செய்த பாவமென்ன?
இது கொடுமை அம்மம்மா!

பொன்னாலை ஆண்டவனும்
'போ' என்று விட்டானோ?
மாவிட்ட புரத்தானும்
மௌனியாய் விட்டானோ?
தெல்லிப் பழைத்துர்க்கை
தெரியாமல் இருந்தாளோ?
பட்டணத்துச் சிவனாரும்
பாராது இருந்தாரோ?
நல்லூர் முருகனார்
நடந்தாரோ எம்முடனே?
அந்தோனி யாரும்
அருள்பொழியும் மாதாவும்
வந்தாரோ எம்முடனே
வழிநடத்திச் செல்வதற்கு?

ஆண்ட அரசுமில்லை
அதற்குமேல் எம்மையெல்லாம்

காக்கும் எனநம்பிக்
கையெடுத்துக் கும்பிட்ட
தெய்வங் களும்எம்மைத்
தெருத்தெருவாய் அலையவிட்டார்!

அம்மா இது கொடுமை!
'அகதி' யாம் நாங்கள் இனி!

செவ்வானம் கிழக்காகச்
செம்மணியை வந்தடைந்தோம்
அங்கு வந்த போதினிலே —

அய்யனே, பெருமாளே,
எங்கும் சனக்கூட்டம்!
சனமந்தை! சனவெள்ளம்!
லட்சமா, லட்சமா,
லட்சோப லட்சம்!
மனிதகுலம் இந்த

மண்ணில் நெளிகிறது!

'அண்ணை எங்கே? தம்பி எங்கே?
அப்பு எங்கே? அக்கை எங்கே?,
இவ்விதமாய்த் தேடுகிற
இயல்பினர்கள் ஒரு பக்கம்

'அம்மா பசிக்கிறது!
அம்மா தேத்தண்ணி!
தண்ணி விடாய்க்குதம்மா - பச்சைத்
தண்ணியெனும் தாருங்கோ!
கால்கள் உளையுதம்மா
களைப்பாய் இருக்குதம்மா'

இந்த விதமாக
இதயத்தைப் பிழிந்தெடுக்க
வந்த குரல்கள்!
அனுங்கல்கள்!

அழுகைகள்!
ஐயோ எனக் குழறும்
அவலக் குரல் ஒலிகள்!

என்பாவம் செய்தோம்,
இதையெல்லாம் கேட்பதற்கு?

மந்தை நடக்கிறது
நடக்கிறதா? இல்லையில்லை!
நத்தை நகர்வதுபோல்
நகர்கிறது - அதுகூட
முன்னாக இரண்டடிபோய்
இடிபாட்டின் தள்ளுதலால்
பின்னுக்கோர் அடிவைத்து —
இப்படித்தான் நடந்தார்கள்
இது உண்மை! உம்மாணை!

மழையில் நனைந்து

மனமும் மிகச்சோர்ந்து
வெயிலிலே காய்ந்து
வியர்வை தனில்குளித்து
'எப்படியோ' நடந்தார்கள்!

அப்படியாய் வழிநடந்து
பத்துமைல் நடக்க
எத்தனை மணி நேரம்?
மணிக் கணக்கைத் தாண்டி
நாட் கணக்கும் ஆயிற்று!
பொய்யில்லை; புழுகில்லை —
பத்துமைல் நடக்கப்
பாவியர்க்கு இரண்டரை நாள்!
'கின்னஸ்' புத்தகத்தில் - இதைக்
கிடத்தி வைக்கலா மெல்லோ?

சிரிப்பா? - சிந்தித்துப் பார்க்கச்
சித்தம் கலங்கிறதே!

நடை மெலிந்தோர்கண்கலங்கி
நன்றாகக் களைத்துப்போய்
சாவகச் சேரியினின்
சந்தியிலே நிலைகொண்டார்.

அங்கே --
கோயில்கள் பள்ளிக்
கூடங்கள் எனுமிடங்கள்
விரைவாய் நிரம்பிவிட
வெளியிலே இடம் தேடி
தெரிந்தவர்கள் வீட்டுத்
திண்ணைகளும் நிரம்பிவிட

அதன் பிறகு —

வளவுகளில் கொட்டில்கள்
வசதியாய்ப் போட்டார்கள்

'வசதி' என்றா சொன்னேன்?

நல்ல 'வசதி' இது!

யாழ் நகரில் —

படுப்பதற்கு ஓர் அறையும்
படிப்பதற்கு ஓர் அறையும்
சமைப்பதற்கு ஓர் அறையும்
சாப்பிடுதற் கோர் அறையும்
இருப்பதற்கு ஓர் அறையும்
குளிப்பதற்கு ஓர் அறையும்
கும்பிடுதற் கோர் அறையும்

இவ்விதமாய் —

கண்ணியமாய் வாழ்ந்தவர்கள்
பத்தடிச் சதுரத்துள்
பன்னாங்குக் கொட்டிலிலே

எல்லாமே ஓரிடமாய் —
நல்ல ‘வசதி’ இது!

சாவகச் சேரிதனில்
சரியாக முறையாக
வாழ்ந்திருந்த மக்களிடம்
வந்த சனவெள்ளம்
குத்து மதிப்பாகக்
குறைந்தது ஐந்துலட்சம்!

சாவகச் சேரிச்சன
சமுத்திரத்தி லேயிருந்து
கிளாலி வழியாகக்
கிளிநொச்சிப் பக்கம்போய்
தண்ணீர் வசதியின்றி
தங்குதற்கும் இடமுமின்றி
வாழ்வைத் தொலைத்து
வாழ்ந்தவர்கள் ஒரு பகுதி

வல்லவர்கள் வாழ்ந்திருந்த
வடமராட் சிக்குவந்து
வாழத் துடித்துநின்ற
வலுவற்றார் ஒரு பகுதி

பெற்றோர் ஒரு பக்கம்
பிள்ளைகளோ மறுபக்கம்
உற்றார் உறவாரும்
உருக்குலைந்து போனார்கள்!
சிச்சீ, இது என்ன
சீர்கெட்ட சிறுவாழ்க்கை!

இருக்க இடமின்றி
இடைஞ்சலுற்ற ஏதிலிகள்
உண்ண உணவுக்கும்
உற்றபல தேவைக்கும்
பட்ட பெரும்கஷ்டம்

பாடமுடி யாதம்மா!

வீட்டுக்குள் ளே 'பைப்' பை
விரைவாகத் திறந்து தண்ணீர்
ஓட்டத்தைப் பார்த்தவர்கள் –
வளவுகளைத் தாண்டி
வயல்கள் பலதாண்டி
தண்ணீக்குப் பட்டகஷ்டம்
தரிபடுமோ தயிர்படுமோ!

பாணுக்குக் கொஞ்சநாள்
பட்டதுயர் போதுமம்மா!
அரிசியும் மாவும்
அருந்தலாய்க் கிடைத்ததுதான்
காய் பிஞ்சு, தேங்காய்
கடிதங்கள் எழுதுதற்கு
கடதாசி, முத்திரைகள்,
கழுவுதற்குச் சவர்க்காரம், - சிறு

பாத்திரங்கள், படுப்பதற்குப்
பாய், துணிகள்,
மண்ணெண்ணை — மற்றும்
மசாலாப் பொருள்வகைகள்,
எரிப்பதற்கு விறகு —
எல்லாப் பொருள்களுமே
ஆனை விலை, குதிரைவிலை!
அநியாயக் கொள்ளைவிலை!

ஆரால் முடியுமிந்த
அறாவிலைக்குப் பொருள்வாங்க?
உத்தியோ கத்தருக்கு
உறுதுணையாய்க் காசோலை
மாசமுடிவில் வந்துவிடுமதனை
மாற்றித் தொலைப்பதற்கு
வங்கிகளில் பணமில்லை,
வரவுவைப்பார் கணக்கினிலே!
காசாக மாற்றுதற்குக்

கனநாட்கள் ஆகிவிடும்!

உத்தியோ கத்தர்கள்
ஒருகொஞ்சப் பேர்கள்தான்
மிச்சமாய் இருந்த
மிகஅதிகர் என்செய்வார்?

நகைகளை வைத்திருந்தோர் - படு
நட்டமாய் விற்றார்கள்!
எத்தனை நாளிவர்க்கு
இந்த நகை எல்லாம்
பத்தும்? - அதன் பிறகு
பாவி இவர் என்செய்வார்?
ஐயையோ அம்மா எம்
ஆசைப்பொன் நாடம்மா!
உன்னை நினைத்து இந்த
உயிர் துடிக்கு தேயம்மா!

மேலிருந்தும் கீழிருந்தும் - உன்
மேனியெலாம் புண்ணாக
குண்டுகள் போட்டார்கள் - 'ஷெல்'
குறிபாரர் தடித்தார்கள்!

அந்த நிலையினிலும்
அம்மாவே உன்மடியில்
அயலட்டை யோடுமன
ஆறுதலாய் நாமிருந்தோம்

உன்மடியில் நாமிருந்தால்
உண்ணா திருந்தாலும்
உள்மனத்தி லேயுறுதி
உடையாமல் இருந்தோமே!

வானம் இடிந்தாலும் - மனதில்
வல்லமை இருந்ததம்மா!

உலகம் புரண்டாலும் - ஒரு
உறுதி இருந்ததம்மா!
செத்தாலும் உன்மடியில்
சுகமாக இருக்குமம்மா!

உப்பின் அருமை அது
உள்ளளவும் தெரியாது
அம்மா உனதருமை
அயல் மண்ணில் தெரிகிறது!

பொல்லாக் கொடுமையினால்
புலம்பெயர்ந்து வந்து விட்டோம்!
பொருள் விட்டோம்; போகிறது!
பொன்னான மண்ணம்மா,
உன்னைத் துறந்தோமே!
உன்னைத் துறந்தோமே!

இப்போது, இங்கே

இயல்பான வாழ்வுகெட்டோம் - எம்
பிள்ளைகளின் பின்வாழ்வும்
பிழையாகிப் போனதம்மா!

தீயோர்செய் கொடுமையினால்-நாம்
திக்கற்றுப் போய்விட்டோம்!

உடலால் மெலிந்தோம்
உள்ளத்தால் செத்து விட்டோம்!
அம்மாவே உன்மடியில்
அமைதியாய் வாழ்ந்த அந்த
பொன்னான காலப்
பொழுதை எதிர் பார்த்துள்ளோம்!

*(1996 மார்ச் மாத நிலையில் எழுதியது)*

# இலக்கியமும் இலக்கணமும்.

இந்த இலக்கியப் படைப்பு என்ன உருவ அமைப்பில் வந்திருக்கிறது?

கவிதையா, உரைநடையா?

சந்தேகமில்லை, இது கவிதைதான்!

கவிதையாயின் -

இது மரபுக்கவிதையா, புதுக் கவிதையா?

யாப்பிலக்கண கட்டுப்பாடுகளை இது சரிவரக் கடைப்பிடித்திருப்பதாகத் தெரியவில்லை

எனவே இது மரபுக்கவிதையல்ல.

புதுக் கவிதைகளில் ஓசை நயம் ஒரு ஒழுங்கில் இருப்பதில்லை. கவிதை அடிகளும் புதுக்கவிதைகளில் ஒழுங்குமுறையின்றியே அமைந்திருக்கும்.

இந்தக் கவிதையில் ஓசைநயமும், கவிதை அடிகளில் ஒருவித ஒழுங்கும் தெரிகின்றன.

ஆகவே, இந்த ஒழுக்கமான பிள்ளை புதுக் கவிதையாகவும் இருக்க முடியாது.

ஆக,

இதை என்னவென்று சொல்வது? - சும்மா 'கவிதை' என்றே இதன் உருவத்தைக் வைத்துக் கொள்வோம்.

நான் சிறு வயதில் படித்த காத்தவராயன்கதை, அல்லியரசாணி மாலை, நல்லதங்காள்கதை. ஆரியமாலை கதை - போன்ற ஒருவகைக் கவிதை இலக்கியங்கள் என்னைமிகவும் கவர்ந்ததுண்டு. இளமையின் உணர்ச்சி சிலையில் எழுத்தாய், இன்னும் என் நெஞ்சில் இருக்க.

கவிதை வரிகள் எல்லாமே மறந்து போனாலும்
'ஆரியமாலை கூந்தல் அறுபத்து நாலுமுழம்.'

என்ற ஒரே ஒரு வரியே வாலாயமாக முன்னின்று இந்தக் கவிதையை எழுதுவதற்கு வழிகாட்டியாயிற்று.

ஒரு ஆக்க இலக்கியம், எழுத்தாளனுடைய மனத்திலே ஒரு நல்ல கருத்து குடிபுக, அவன் அந்தக் கருத்தைத் சுவையான முறையிலே வெளிப்படுத்துகிறான் - வெளிப்படும் உருவம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று யாரும் கட்டுப்பாடு செய்யமுடியாது.

நல்ல ஆக்கமானால் அந்த ஆக்க இலக்கியம் விலை போகும். மக்களிடையே பேசப்படும். அதைப் பிறகு ஆய்வுசெய்யும் இலக்கணக்காரர்கள் அந்த உருவத்துக்கு ஒரு பெயர் வைக்கட்டும்.

தொப்பிக்கு அளவாகத் தலையைப் சரிசெய்து வைக்கிற வேலை தேவையில்லை.

இலக்கியம் நன்றாக இருந்தால் அதற்கு - புதிதாக வேனும் ஒரு இலக்கணம் அமைத்துக் கொள்ளுவார்கள்.

ஒரு நல்ல இலக்கியத்தில் மக்கள் எதிர்பார்ப்பது என்ன?

'நல்ல கருத்துக்கள். அது சுவையாகக் கட்டி எழுப்பப்பட்ட விதம் - இந்த இரண்டும் இருந்தால் அது நல்ல இலக்கியமே!

இலக்கணக் சட்டுக்குள் அடங்கவில்லை என்பதற்சாக எந்த ஒரு நல்ல இலக்கியமும் ஒதுக்கப்படக் கூடாது!

- வரதர்.



இந்நூலின்,

'ஒவ்வொரு வரியும்
நாம் அனுபவித்த
அவலத்தினையும்
இழப்புகளையும்
ஏமாற்றங்களையும்
எடுத்து விளம்புவதன் மூலம்
நெஞ்சில் குருதி வடிய வைக்கின்றன.'

'இது ஒரு காலகட்டத்தின்
ஆவணம் என்ற நிலைப்பாட்டிற்கு அப்பால்
தக்கதொரு கவிதை நூலாகவும்
கணிக்கப்படுவதாக இருக்கின்றது.'

— ''செங்கை ஆழியான்''